# மாற்றம்

மக்கள் சஞ்சிகை

பயணம் : 01 பாதை : 03

சித்திரை ஆனி, 1993

ஆசிரியர் :
யாதுமூரான்

இணை ஆசிரியர் :—
மல்லிகை மைந்தன்

வெளியீடு :
தமிழ்த்தாய் மன்றம்

தொடர்பு :
மாற்றம் பணிமனை
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## மறுபிறவி

இருள் சூழ்ந்த பூமி ஒளி தேடுகிறது. பொருளாதார நெருக்கடிகள் மடைதிறந்த வெள்ளமாக மனித இதயங்களை மரணத்தின் விளிம்புக்கு அழைத்துச் சென்றுவிட்டது. மாற்றத்தில் சில மாற்றங்கள் அவசியமாகிறது.

''மாற்றம்'' மக்களுக்காக மக்களால் வெளியிடப்படுவதால் பொருளாதார நெருக்கடிகள் மாற்றத்தையும் மரணத்தின் விளிம்புக்கு கொண்டு வந்துவிட்டது.

ஆனால் ''மாற்றம்'' மறுபிறவி எடுக்கும். இந்தக் கொடிய சமூக அமைப்பை மாற்றும் வரை. மாற்றத்தின் பெறுமதி அப்போது உணரப்படும்.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்பட ஒவியர்:
**மாற்கு**

ஒற்றுரு:
**ஆனந்தன்**

விளம்பர அமைப்பு:
**பே. ராஜவர்மன்**

மன்ற ஆலோசகர்:
**கலாநிதி க. கனகராசா**

விநியோகம்:
**மு. சுதாகரன்**
**கி. ஞானவதனி**
**இ. பேரின்பநாதன்**
**பி. யூலியஸ்செபஸ்ரீன்**
**ஆர். முரளி**

அச்சமைப்பு:
**அருண் பிறிண்டேர்ஸ் அன்ட் பப்ளிஷேர்ஸ், யாழ்ப்பாணம்.**

பதிப்பாளர்:
**பொற்கமலதேவி பதிப்பகம்**

பக்கங்கள்: 40

அடுத்த இதழ்:
**1993 ஆடி**

தனிப்பிரதி:
**ரூபா: 15 00**

ஆண்டுச் சந்தா:
**ரூபா: 65.00**
(நான்கு இதழ்கள்)

# உள்ளே...


★ தனிமனித சுதந்திரம்
★ சுவையான புதினங்கள்
★ சங்கத் தமிழ்ப் பெண்கள்
★ மானிப்பாயில் சில மணிகள் (நேரடி றிப்போட்)
★ தமிழர் பார்வையில் இலங்கை அணி
★ எழுந்திடுவாய் (கவிதை)
★ புலவர் பார்வதிநாதசிவம்
★ நாட்டுப்பற்று
★ பொது அறிவுப் போட்டி
★ டிங் ...... டிங் ...... வண்டி ... சைக்கிள் வண்டி
★ விவாத மேடை
★ வாசகர் கடிதம்
★ தியாகம் (சிறுகதை)
★ பேனா நண்பர்கள்
★ சுருட்டியின் பதில்கள்
★ பீரங்கி
★ தேசாபிமானி யார்?
★ இளங்கலைஞர் மன்றம்
★ ஊரும் பெயர்க்காரணமும்
★ உங்களுக்குத்தெரியுமா?
★ ஆசிரியரே கேளும்
★ குறுக்கெழுத்துப்போட்டி


**வாசகர்களே !**

மாற்றம் காலாண்டு மக்கள் சஞ்சிகை பற்றிய உங்களுடைய கருத்துக்களையும் ஆக்கங்களையும் புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். கருத்துக்கள் கட்டுரையாளர்களது, எழுத்துக்கள் எழுத்தாளர்களது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவிதமான அக, புறச் சூழ்நிலைகளுக்கும் கட்டுப்படாமல் தன் எண்ணப்படி செயற்படுதல் சுதந்திரம் அனுபவித்தலாகும். தனிமனிதனொருவன் அடையத்தக்க மிக்க உயர்நிலையானது, தான் தனிமனித சுதந்திரத்தை அனுபவிக்கிறான் என்று உணர்தலாகும். தேசம் ஒன்று சுதந்திரம் பெற்றுவிட்டது என்று கூறும்போது, சாதாரணமாக, அத்தேசம் தலைத்து ஏனைய தேசங்களின் உதவியின்றி தன்னிறைவாக தனது அரசியல், சமூக, பொருளாதார தேவைகளை நிறைவேற்றக்கூடிய தன்மையைப் பெற்றுவிட்டது என்று கூறவேண்டும். ஆனால் உண்மையில் உலகத்தில் சுதந்திர நாடுகள் என்ற பெயரை வைத்துக்கொண்டிருக்கும் தேசங்கள் அவ்வாறு பக்குவம் பெற்றிருக்கின்றனவா எனச் சற்று ஆராய்ந்துபார்த்தால் ஒரு நாடு கூட உண்மையான சுதந்திர தேசமாக இல்லை சுதந்திரம் என்ற போர்வையில், சுதந்திரத்தின் ஆணிவேரான ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன அராஜகம், சுரண்டல், ஊழல் என்பன தலைவிரித்தாடுகின்றன. மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக்கொண்டு அவர்களின் வியர்வையால் தங்களையே வளர்த்துக்கொள்ளும் ஆட்சியின் உயர்மட்டத்தினர் வாயளவிலேயே ஜனநாயகம், சுதந்திரம் பற்றிப் பிதற்றுகின்றனர். மக்களோ ஆட்சியினரின் கோரப் பிடியில் சிக்கி வாயில்லாப்பூச்சிகளாக இனிமேல் இழப்பதற்கு ஒன்றுமில்லா நிலையில் ஏதோ வாழ்ந்து மடிகிறார்கள். எந்தத் தேசத்தில் மக்கள் அனைவரும் தனிமனித சுதந்திரம் அனுபவிக்கும் வாய்ப்புப் பெற்றுள்ளார்களோ அத்தேசம் தான் சுதந்திர தேசம் என்று கூறிக்கொள்ளும் அருகதையுடையதாகும். ஆனால் தனிமனித சுதந்திரம் என்னும் உயரிய கோட்பாட்டை முழுமையாக ஒருவன் அல்லது ஒருத்தி அனுபவிக்கமுடியுமா? எனச்சற்று சிந்தித்தால், மகாத்மாகாந்தி கண்டுபிடித்த அகிம்சைக் கோட்பாடுபோலவே இதுவும் பரிபூரணமாக நிறைவேற்றப்படமுடியாத ஒன்றாகவே தோன்றும்

# தனிமனித சுதந்திரம்

“அக்கரைச்சக்தி”

மனிதன் ஒரு சமூகப்பிராணி. தனித்து வாழ்வது அவனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முடியாத காரியமாகும் மற்றவர்களோடு சேர்ந்து கூட்டமாக வாழுவதே மனித இயல்பு எவ்வித பந்தமோ, பாசமோ இல்லாது உலக வாழ்வைத்துறந்து தனி

யாகவே காடுகளிலும் மலைக் குகைகளிலும் வாழ்ந்து தவம் புரியும் துறவிகளைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்கள் தங்கள் தவ வலிமையால் மோட்சம் என்னும் உயர் நிலையை அடைந்து இறைவனுடன் ஐக்கியமாவதாகச் சொல்லப் படுகிறது எனினும் இந்த முயற்சியானது தான் மட்டுமே விமோசனம் பெறுவதாக இருப்பதால் தன்னலநோக்கம் மிகக் கொண்டதாகவே உள்ளது. இப்படியான விரல்விட்டு எண்ணக்கூடிய அசாதாரண மனிதப்பிறவிகளை, யாம் எமது பொதுப்படையான விடயத்தின் அங்கத்தினராக எடுத்துக்கொள்ள முடியாது. இவர்கள் தனிமனித சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள் என்பது உண்மையே ஆனாலும் மனிதன் ஒரு சமூகப்பிராணி என்ற வரையறையைவிட்டு அப்பால் சென்றவர்களாக இவர்கள் உள்ளனர்

மனிதன் தாயின் கருவில் உருவான நாள் முதலாக அவன் மரணம் பயந்தும் பெரும்பாலும் பிறரின் ஒத்தாசையும், உதவியுமின்றி வாழமுடியாதவனாகவே உள்ளான் எனவே தனிமனித சுதந்திரமென்பது சாதாரண மனிதனுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது. குழந்தைப் பருவமுதல் வாலிபனாகும்வரை தாய், தந்தை, பெரியவர்கள், ஆசிரியர்கள் என்போரின் கட்டுப்பாடுகளும், வழிநடத்தல்களும் ஒரு மனிதன் வளர்ந்துவருவது ஒரு புறமிருக்க அப்பருவ காலத்தில் தனிமனித சுதந்திரம் என்ற கோட்பாட்டுக்கே இடமில்லாமல் இருக்கிறது வாலிபப்பருவத்தில் திருமணம் செய்து ஒருத்திக்குக்கணவன் என்ற அந்தஸ்தைப் பெற்றவுடன் சில வேளை, தான் தனியாளாய் இருந்து அனுபவித்த அற்ப சொற்ப சுதந்திரத்தைக்கூட இழந்துவிடக்கூடிய நிலை ஏற்பட்டு மனத்திற்குள் வெதும்ப வேண்டி ஏற்பட்டுவிடுகிறது. இதற்குக் காரணம் சுதந்திரம் அனுபவிக்கவேண்டும் என்ற விருப்பத்தை, குடும் சுகம் அனுபவிக்கவேண்டும் என்ற விருப்பம் பின் தள்ளிவிடக்கூடியதாயுள்ளது. வாலிபவயதில் பெண்ணின்பத்தைவிட எதுவும் பெரிதாய்த் தோன்றுவதில்லை. இது இயற்கையான மனித சுபாவம், இது ஒரு குற்றமான மனப்பான்மையுமல்ல. ஆனால் தனிமனித சுதந்திரம் குடும்பவாழ்க்கையில் பாதிக்கப்படுவது உண்மைதான். குழந்தை குட்டிகள் பிறந்து தந்தை ஸ்தானம் கிடைத்துவிட்டால் அவர்களை வளர்த்து ஆளாக்குவதிலும், அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்கள் சோதனைகளுக்கு முகங் கொடுப்பதிலும் மனிதனது சக்தியும், உழைப்பும் செலவாகிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதால் தனிமனித சுதந்திரம் அங்கு பொருளற்ற கோட்பாடாகவே இருந்துவிடுகிறது. ஓரளவு படித்து தொழிலில் ஈடுபட்டுவிட்டால் அத்தொழில் நிர்வாகிகளின் கட்டுப்பாடுகளுக்கும் கட்டளைகளுக்கும் பணிந்தே செயற்பட வேண்டியுள்ளது. தொழிலில் முன்னேறுவதற்கும், பொருளீட்டுவதற்குமான ஆர்வம் காரணமாக தனிமனித சுதந்திரமாம் விழுமிய கோட்பாட்டைப்பின்பற்ற முடியாத நிலையே இங்கும் உள்ளது. பிள்ளைகள் வளர்ந்து அவர்களின் பொறுப்புக்கள் யாவையும் நிறைவேற்றியாய் விட்டது என வைத்துக்கொண்டாலும் சுதந்திரத்தைப்பாதிக்கும் காரணிகள் மட்டும் விட்டுப்போவதில்லை. அரசாங்கச்சட்டங்கள் மதக்கோட்பாடுகள், ஒழுக்க நெறிகள், சமூக சாதிக்கட்டுப்பாடுகள் என்பன இறுதி மூச்சுவரைக்கும் மனிதனை இறுகப்பற்றிக் கொண்டு அவனது தனிமனித சுதந்திரத்தைப் பறித்துவிடுகின்றன. இவைகள் யாவும் புறச்சூழ்நிலைகளால் இந்தப்பிறப்புரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

அகச்சூழ்நிலையைப் பொறுத்த மட்டில், அவன் கற்ற நூல்களில் உள்ள சிந்தனையைத் தூண்டும் கருத்துக்கள், அறிவு, சிந்தனைப் போக்கு, நம்பிக்கை என்பன மனிதனின் தனிமனித சுதந்திரத்தைப் பாதிக்கவல்ல சக்திகளாக உள்ளன். ஆனால் புறச்சூழ்நிலைகள் எவ்வாறு இருந்த போதும் சிந்தனை விடயத்தில் மட்டுமாவது சுதந்திரமான போக்கை உருவாக்க இடமிருக்கிறது "தனிமனிதனது ஒரு பிரச்சனை அம்மனிதனது சிந்தனை ஆற்றல் மூலம் அவனாலேயே தீர்க்கப்படமுடியும்" என்பது உலகப்பேராசிரியரும் அண்மையில் வாழ்ந்து மறைந்த தத்துவஞானியுமாகிய ஜே கிருஷ்ண மூர்த்தி அவர்களின் அரிய வாக்கியமாகும் அவரைப் பொறுத்த வரை தனிமனித சுதந்திரத்தை ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொண்டு அதை அடைய முயற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி ஓரளவு வாழ்க்கையிலும் செயற்படுத்திக்காட்டியவர் என நாம் கூறலாம். திரு. கிருஷ்ண மூர்த்தி பல்வேறு தரப்பட்ட மக்களோடு நடாத்திய உரையாடல்களும், வினாவிடைகளும் அவரது சிந்தனை ஒழுக்கத்தையும், சுதந்திரமான சிந்தனைப் போக்கையும், எதற்கும் கட்டுப்பட்டு தன்வழியை இழக்காத, மாற்றாத நடத்தையும் எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. இவ்வரிய அறிஞரது நூல்களை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமானால் நிச்சயம் தனிமனித சுதந்திரம் என்றால் என்ன? அதன் அடியும் நுனியும் எவை என்பதை புரிந்து கொள்ள அவ்வளவு சிரமம் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❋ முட்டாள் தினம் ஏப்ரல் - 1

1564 ஆம் வருடத்தில் பிரான்சை ஆண்டுவந்த பத்தாம் சார்லஸ் எனும் மன்னன் புதிய கலண்டர் முறையைப் புகுத்தினார். அதற்கு முன்பு இருந்து கலண்டர் முறைப்படி புதுவருடம் ஏப்ரல் 1 ஆம் திகதியிலிருந்து தொடங்கியது.

மன்னர் புகுத்திய புதிய கலண்டர் முறைப்படி புதுவருடம் ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

சிலர் புதிய முறையை ஏற்க மறுத்து பழைய ஏப்ரல் - 1 முறையையே புத்தாண்டு தினமாகக் கருதி கொண்டாடினர்.

# சுவையான புதினங்கள்

புதியகலண்டர் முறையை ஒத்துக்கொண்டவர்கள் ஏப்ரல் 1ஆம் திகதியை முதல் நாளாகக் கொண்டாடிய பழமை வாதிகளை முட்டாள்களாக்கிக் கேலி செய்தனர். அப்படித்தான் இம்முறை தோன்றியது.

## ❋ திருமணச்சடங்கு

கொரியாவில் திருமணச் சடங்கின்போது மணப்பெண் கண்களை மூடிக்கொண்டே இருக்கவேண்டுமாம். இதற்கெனக் கண்களை பிளாஸ்திரி போட்டு ஒட்டிவிடுவார்களாம்.

## ❋ படிக்கத்தெரியாத பேரறிஞர்கள்

வரலாற்றில் மிகப்பெரிய அறிஞர்களாகக் கருதப்படும் ஹோமருக்கும் சோக்ரடீசிற்கும் எழுதவோ, படிக்கவோ தெரியாது.

அவர்கள் கூறியதைப் பிறர் கேட்டு எழுதியவைதான் இன்று உள்ள அவர்களது சிந்தனைகள் ஆகும்.

## ❋ விநோத சட்டங்கள்

அமெரிக்க ராஜ்யங்களில் விசித்திரமான பல சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. நெப்ராஸ்காவில் முடிவெட்டுவோர் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை வெங்காயம் சாப்பிடக்கூடாது என்ற தடை இருக்கிறது. ஐஸ்கிறீம் பைக்கற்றை பையில் யாரும் எடுத்துச் செல்லக் கூடாது என்று கென்டக்கியல் சட்டம் தடுக்கிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் பூண்டு சாப்பிட்டு நான்கு மணி நேரத்துக்குள் பஸ்ஸில் பிரயாணம் செய்யக்கூடாது என்று இண்டியானா சட்டம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத் தமிழ்ப் பெண்கள்

சங்ககாலம் என்பது தமிழிலக்கிய வரலாற்றில் மிகமுக்கியமான காலப்பரப்பாகும். தமிழரின் கலைகள், பண்பாடுகள் வரலாற்று ரீதியாகப் பொறிக்கப்பட்ட காலம். இக்காலப் பரப்பு தன்னகத்தே முந்நூறு ஆண்டுகளை உள்ளடக்கியது. கிறீஸ்துவுக்குப்பின் முதல் முந்நூறு ஆண்டுகள் நிலவிய தமிழர் உயர் பண்பாட்டுக்காலமே சங்ககாலமாகும். இக்காலத்தில் தமிழரின் அரசியல், சமூக, பொருளாதார அம்சங்கள் சிறப்புற்றிருந்தன. சமூகம் சிறப்புற அக்காலப்பெண்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

சங்ககாலத்திலே பெண்கள் தக்க இடத்திலே வைத்து மதிக்கப்பட்டுள்ளார்கள். பெண்களும் போற்றுதற்குரியவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். இதனால் சமூகத்தினால் பெண்கள் போற்றப்பட்டுள்ளார்கள்.

சங்கத்தமிழ்ப் பெண்கள் ஆண்கள்போல் மது அருந்தினார்கள், ஆண்களுடன் கடலிலே நீச்சலடித்து விளையாடினார்கள், குளங்களிலே குத்துக்கரணம் அடித்தார்கள். அப்போது பெண்கள் ஆண்களுடன் பழகுவதற்கு எந்தவித தடையும் இருக்கவில்லை. ஆயினும் பெண்கள் கற்புள்ளவர்களாக இருப்பது போற்றப்பட்டது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் ஒருங்கே பெற்றவள் மதிக்கப்பட்டாள். அன்றைய பெண்கள் தினைப்புலங்களை காத்தனர், கையிலே கவணுடன் உலாவந்தனர். பரண்களில் ஏறி நின்று தோட்டங்கள் காத்தனர். பயிர்செய்ய நிலத்தைக் கொத்திப் பண்படுத்தினர், அரிசி குற்றினர், முற்றம் கூட்டினர்,

கண. சுதன்.

தீபமேற்றினர். இதுமட்டுமன்றி போர்ப்பாசறைகளில் போர்த் தலைவர்களுக்கு துணையாகச் செயற்பட்டனர்.

பெண்கள் தமது பொழுது போக்கிற்காக பலவகையான விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். கடற்கரைகளில் வண்டில் விளையாடினர், பணத்திலே சிறந்தவர்கள் பந்து விளையாடினர், நீர்விளையாட்டுக்களிலும் ஈடுபட்டனர்.

அன்றைய பெண்கள் அழகினை விரும்பினர், அதற்காக கூந்தலை நீளமாக வளர்த்தனர். அக்கூந்தலில் பூச்சூடி மகிழ்ந்தனர், கூந்தலுக்கு அகிற்புகை ஏற்றி வாசனை ஊட்டினர், தமது அழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனியை மறைக்க மெல்லிய ஆடைகளைப் பயன்படுத்தினர், தலையிலே கொண்டை போட்டு அதைச்சுற்றி பலவிதமான நறு மணப்பூமாலைகளைச் சூடினர். தலைக்கு களிமண்வைத்து முழு கினர், அதனால் அவர்களது கூந்தல் கருமையாக இருந்தது. பலவகையான வாசனைத் திர வியங்களை தமது உடலில் பூசி மகிழ்ந்தனர், தமது உடல்களில் ''தொய்யில்'' (பல வர்ணங் களைக் கொண்டு வரைதல்) வரைபடத்தை தமது காதலர் களைக் கொண்டு வரைவித்தனர். பொன், வெள்ளி, மணி, சங்கு, முத்து முதலியன கொண்டு ஆக் கப்பட்ட ஆபரணங்களை அணிந் தனர். இடையிலே மேகலை உடுத்தினர். தோடு, மூக்குத்தி போன்றவற்றையும் நூற்சேலை கள், போன்றவற்றையும் அணிந் தனர்.

பெண்கள் பொதுநிகழ்வுகளில் பங்குகொண்டனர், நடனமாடி னர், இசைமீட்டினர், நல்ல அணி கலனும், டாம்பீகமான உடை களும் உடுத்தி செல்வம்மிகுந்த ஆடவர்களை மயக்கி அவர்களி டம் இருந்து செல்வத்தை அப கரித்து அவர்களை ஏமாற்றினர். இத்தகைய பெண்கள் விபச்சாரம் செய்தனர், ஆண்களுடன் கூத் தாடி இன்புறுவர், பெண்கள் தாம் விரும்பிய ஆடவரைக் காதலிக்க தடை இருக்கவில்லை, திருமணமாகுமுன்னமே ஆணும், பெண்ணும் உடலுறவு கொண் டனர். தற்போது நம்மத்தியில் இருக்கும் ஆரிய திருமணமுறை அப்போது இருக்கவில்லை. மண மகனும், மணமகளும் அக்கினி வளர்த்து அதைச் சுற்றிவரும் முறை காணப்பட்டது. திராவிட முறையிலேயேஅன்றைய சடங்கு கள் நிகழ்ந்தன.

இல்லறவாழ்க்கையில் ஆணும் பெண்ணும் சமபங்கு வகித்தனர் அவர்கள் இருவரும் தம்மை மறந்து தமது உடல்களைக் கொண்டு அனுபவிக்கக்கூடிய உச்ச இன்பங்களை அனுபவித்து மகிழ்ந்தனர். இல்லறத்தில் ஆண், பெண் அன்பு அச்சாணியாக விளங்கியது. சங்ககாலத்தில் பெண்களின் அழகினை அக்கால ஆடவர் அழகுமயிலிலும், புள்ளி மானிலும் கண்டுமகிழ்ந்தனர். கணவன் விரும்பும் பண்டங்களை அருமை மனைவி ஆக்கிக் கொடுத்து வாழ்ந்தாள்.

சங்ககாலப் பெண்கள் மிகுந்த சுதந்திரப் பறவைகளாக வாழ்ந்துள்ளார்கள். தாம் விரும் பிய ஆடவனை மணந்து, சிறப் பாக இல்லறம் நடாத்தி, தமது கடமைகளைச் செவ்வனே செய்து வாழ்ந்துள்ளார்கள். அத்தகைய சங்கத்தமிழ்ப் பெண்களுக்கு அன்றைய ஆடவர் அரணாகவே விளங்கியுள்ளார்கள் தடையாக இருந்ததில்லை. அத்தகைய சிறந்த வாழ்க்கையை வாழ்ந்த சங்கத்தமிழ்ப் பெண்களைப் பற்றி நாம் விளங்கி வாழ்வது அவசியமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடி றிப்போட்

யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் மானிப்பாய் உள்ளது. அங்கே ஆங்கிலேயராட்சியின் உண்மையை உறுதிப்படுத்தும் சின்னங்கள் பலவுண்டு. அவற்றில் ஒன்று ''கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை.'' அந்த வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இராணுவ ஆக்கிரமிப்பினால் இடம்பெயர்ந்த தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை தற்பொழுது இயங்கிவருகிறது. அங்கே உளமருத்துவ சிகிச்சைப் பிரிவு பல்வேறுபட்ட சங்கடங்களுக்கு மத்தியிலும் தன்னாலியன்றளவு சிறப்பாக இயங்குகிறது.

# மானிப்பாயில் சில மணிகள்

வானுயர்ந்த விருட்சங்கள் குடை பிடித்து நிற்க குளிர்ச்சியான அந்த மஞ்சள் கட்டிடங்களில் உளமருத்துவப்பிரிவு இயங்குகிறது. அங்கே உளநோயாளர்கள் தமது நோய்க்கேற்ப செயற்பாடுகளைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பாட்டுப்பாடுகிறார்கள், சிலர் நடனமாடுகிறார்கள், சிலர் ஒரு விதமான விளக்கமுமின்றிப் புலம்புகின்றனர். இன்னும் சிலர் நாட்டப்பட்ட சிலைகள் போல அசைவின்றி மௌனமாக இருக்கின்றனர். இப்படிப் பல்வேறுவகையினர் அங்கே காட்சி தருகிறார்கள். அவர்களுக்கு மத்தியில் வெள்ளை உடையணிந்த பரிசாரகர்களும், தாதிகளும் நோயாளர்களைப் பராமரிக்கின்றனர். அவர்களுடன் வெள்ளைச் சேட்டும், வெள்ளை ஜீன்சும் காலில் வெள்ளைச் சப்பாத்துமணிந்த ஒரு பெண் சேவையாற்றுகிறாள். அவள் அங்கே இருக்கும் மனநோயாளர்களின் நோய்க்கேற்ப தாயாகவும், சேயாகவும், நண்பியாகவும், சகோதரியாகவும், அதிகாரியாகவும் நல்லதொரு உளநோய் மருந்தாகவும் சேவைபுரிகிறார். அவரது பெயர் 'சாரதா'.

வைத்தியசாலை நிர்வாகத்திடம் அனுமதியைப் பெற்றுக்

**● மது — மதன்**

கொண்டு நோயாளர்களின் உண்மை நிலைகளை அறிவதற்காக நாம் செல்கிறோம். எமக்கு உதவியாக சகோதரி சாரதா அவர்களும் வந்தார்கள். முதலில் ஆண் உளநோயாளர்கள் தங்கியிருக்கும் பகுதிக்குச் சென்றோம். அங்கே ஒரு நோயாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை வணங்கியபடியே வரவேற்றார். மேலும் அவர் ''சின்னத்தம்பி படம் பார்த்தீங்களா? அதில் நான் நடிச்சிருக்கேன் ... ...'' என்று கூறினார். அவர் ஒரு முஸ்லிம். ஏறாவூர் முதலாம் குறிச்சியைச் சேர்ந்தவர். அவர் தன்னை ''பஸீல் மாஸ்ரர்'' என்று அறிமுகப்படுத்தினார். அவர் தமிழீழப் போராட்டத்தில் அரசுக்கெதிராக போராடிய வீரனும் கூட. அவரது பெயர் அலியார் அஜித் ஆகும். இந்த இனப்பிரச்சினைப் பிசாசின் தாண்டவத்தினால் பாதிக்கப்பட்டவனே அந்த வாலிபன். அவரது துளிரான இளமைப்பருவம் அங்கே சருகாகிக்கொண்டிருக்கிறது.

இந்த வேளையில் எம்மை ஒருவர் அழைத்தார். நாம் அவரருகில் சென்றோம். அவர் பயபக்தியுடன் கையைக் கூப்பியபடியே ஏழாலை அம்மன் எனக்கேதாவது தண்டனை தருவாளோ? நான் உழைப்பில்லாமல் இருக்கும்போது எப்படித் திருவிழாச் செய்கிறது? ... போன திருவிழாவில் பெரிய பிழையை நான் செய்திட்டன். கையில் தெர்ப்பையை போட்டுக்கொண்டு தெரு வீதிக்கு வரக்கூடாதாம். நான் தெரியாமல் வந்திட்டன் . '' இப்படி பலவாறு தான் இறைவனால் தண்டனைக்குட்படுத்தப்பட்டு விடுவேனோ? என்ற ஆதங்கத்தில் மனம் கலங்குகிறார் சொர்ணலிங்கம் (40 வயது). ' நம்பிக்கைகள்சில வாழ்வுக்குத் தடையாகும் போது அவை மூட நம்பிக்கைகள் என்று பெயர் பெறுகின்றன.'

ஒரு இளைஞன் உடலில் அடிவாங்கிய தழும்புகளுடன் கதறிக்கொண்டு படுத்திருந்தார். அவரை அணுகுகிறோம். அவரது நிலைமை பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போலிருந்தது. 27 வயதுடைய அந்த இளைஞன் தன் கண்முன்னாலேயே கடலில் சகோதரன் இறந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் உள்ளம் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் அவரது செயற்பாடுகள் அசாதாரணமாக இருக்க சிலர் அவரைத் திருடன் என்று தவறாகநினைத்துத் தாக்கியதால் மேலும் மோசமாக உள்ளம் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது பெயர் சண்முகசுந்தரம்.

''நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடு ராஜா ' என்றும் பாடியபடியே கிருஷ்ணகுமார் ( 19 வயது ) எனும் நோயாளி எம்மருகேவந்தார். அவருக்கு மனைவியும் உண்டு, பிள்ளையும் உண்டு. ஆனால் வசிக்க வீடில்லை, வாழஉழைப்பில்லை. இவைகளே இவரது நோய்க்குக் காரணமாகியிருக்கலாம். ' தனியாகவே செல்லமுடியாத மூஞ்சூறு விளக்குமாறையும் தூக்கிக்கொண்டு செல்வதென்றால் எப்படி முடியும்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன் என்ற குருநகர் வாசி (வயது 45) சண்டை பிடிக்கும்போது தலையில் பலமான அடிபட்டதனாலும், அவருக்கருகில் இருந்த சுப்பிரமணியம் எனும் ஐம்பது வயது நபர் அளவுக்கு மிஞ்சிய மதுவருந்தலாலும், வேலுப்பிள்ளை எனும் முதியவருக்கு பொழுதுபோகாமல் அளவு மீறி யோசிப்பதாலும் மனநிலை பாதிப்படைந்துள்ளனர்கள். 'சில துன்பங்கள் தானாக சிலரிடம் வந்து சேர்ந்துவிடுகின்றன ஆனால் சிலர் துன்பங்களைத் தாமாகத் தேடிக்கொள்கிறார்கள்.'

மேலும் சமூகத்திலே உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்களாகக் கருதப்படும் 27 வயதுடைய ஆங்கில ஆசிரியர், 65 வயது உடைய உப அதிபர், வயது முதிர்ந்த வங்கி முகாமையாளர் ஆகியோரும் உள நோயாளர்கள் ஆக உள்ளனர். இறுதியாகக் கூறிய இருவரது எல்லாப் பிள்ளைகளும் வெளி நாடுகளில். இவர்கள் இங்கே அநாதைகள் 'பணமிருந்தென்ன' படிப்பிருந்தென்ன அமைதியான உள்ளம் வேண்டும்.

கட்டிடத் தொழிலாளியான பாஸ்கரன் (27 வயது), மெக்கானிக்கான சூரி (40 வயது) என்பவர்கள் நோய் ஓரளவு குணமாகிய நிலையில் 'கரம்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களை அணுகியபோது 'எங்களுக்குத் தொழில் வேணும் உழைச்சுக் குடும்பத்தைப் பார்க்க வேணும்' என்று ஒரே குரலில் பேசினர். அவர்களிருவரும் தொழிலின்மையினால் நீரையிழந்த சோலைபோல வாடியிருக்கிறார்கள்.

ஆண் நோயாளர்களைச் சந்தித்துவிட்டு பெண்நோயாளர் தங்கியிருக்கும் பகுதிக்குச் சென்றோம். அங்கே அறைக்குள் தனியே பூட்டிவைக்கவேண்டிய அதிகமான மனத்தாக்கங்களுக்கு உட்பட்ட நோயாளிகள் காணப்பட்டனர். பூட்டிய அறைகளுக்குள்ளேயிருந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர் சிலர். அதற்கு அப்பால் வெளித்திண்ணையிலும் சுவர்க்கட்டுக்களிலும் தம்மிஷ்டப்படி இருந்தனர் சிலர். அவர்களுடன் பார்வையாளர்கள் கதைத்துக்கொண்டு நின்றனர். அதற்கு அப்பால் மறைப்பு எதுவுமற்ற நிலையில் நோயாளிப் பெண்கள் சுதந்திரமாகக் குளித்துக்கொண்டு நின்றனர். அந்தக் காட்சி வைத்தியசாலையின் நிலையினை எடைபோட தக்க சான்றாகியது.

அங்கே 42 வயதான கௌரி எனும் ஐயரம்மா 'சின்னக்கண்ணன் அழைக்கிறான்' என்று பாட்டுப்பாடியபடி நடனமாடுவதைக் காணமுடிந்தது. அவருடன் இராஜேஸ்வரி என்பவர் 'அழகிய மிதுலை நகரினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு ஜானகி காத்திருந் தாள் ' என்று பாடியபடியே எம்மைப்பார்த்து கைதட்டி அழைத்தார். இவர்கள் இருவரும் தங்களுடைய உடலழகினைப் பற்றி எமக்குச் சொன்னார்கள். இருவரும் ஒரேவகையான தாக் கத்துக்குட்பட்டவர்களாக இருக் கிறார்கள்.

பளையில் அண்மையில் 'சுப்பர் சொனிக்' விமானம் குண்டுவீசி யதால் தன்னுடைய வீட்டையும், தன்னுடைய உடன்பிறந்த சகோதரனையும் இழந்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் தங்க மலர் எனும் 3 பிள்ளைகளின் தாய் பிரமித்துப்போய்இருந்தார். அவருக்கருகில் பேத்தியாருடன் மெளனமாக அமர்ந்திருந்த சாந்தினி என்னும் 15 வயதுப் பெண்ணுக்கு கதைகொடுத்தோம் அவர் பேசவில்லை. பேர்த்தியார் அவரைப் பற்றிக் கூறுகையில் ''இவள் தான் வடிவில்லை என்று நினைச்சு மனம் பாதிக் கப்பட்டிருக்கிறாள்'' எனக் கூறி னார்.

பின்னர் 23 வயதுடைய வத்சலாவை அணுகினோம். அவ ரது நோய்க்குக் காரணம் ஒரு தலைக்காதலாகும். வத்சலா ஒரு ஆணைக் கண்ட மாத்திரத்தில் அவன்மேல் காதல்கொண்டு விட்டார். ஆனால் அந்த ஆணுக்கு தன்மேல் வத்சலா கொண்ட காதலைப்பற்றி எது வும் தெரியாது. வத்சலா தனது காதலை வெளிக்காட்டாமல் மன துக்குள்ளேயே பூட்டிப் பூட்டி வைத்திருந்ததனால் அது மன நோய்க்குக் காரணமாகிவிட்டது. அப்பெண்ணினுடைய பேச்சிலும் பிற செயற்பாடுகளிலும் திருமண வேட்கை தென்பட்டதை அவ தானிக்க முடிந்தது. அவருடன் நின்றவர்களும் வத்சலாவின்

**புதுமை**

**Pack my box with five Dozen Jugs of liquar,** இது புதுமையான ஆங்கில வாக்கியம் இந்தவாக்கியத்தில் எல்லா ஆங்கில எழுத்துக்களும் அடங்குகின்றன. — பிரம்

★

**காவாலி**

மோசமான நடத்தையுள்ளவனை காவாலி, காலி என் றெல்லாம் சொல்கிறோம் அல்லவா? இது எப்படி வந்தது தெரியுமா?

கயாவில் வைதீகச் சடங்குகள் செய்து வைப்பவர்களுக்கு கயாவாளிகள் என்று பெயர், இவர்கள் நேர்மையின்றி பலாத் காரமாகப் பணம் பிடுங்குகிறவர்கள். அதனால் ஏமாற்றுகிற வர்களை கயாவாளி என்று சொல்லும் வழக்கம் வந்தது. இதுவே திரிந்து காவாலி ஆகியிருக்கிறது — எஸ். எஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வேட்கை பற்றியும் தற்போதுள்ள நிலையில் நிறைவேற்ற முடியாத நிலமையினையும் கூறி வேதனைப்பட்டனர். 'மடை திறக்கப்படாத குளங்கள் தான் அனேகமாக அணைக்கட்டுகளை உடைத்துவிடுகின்றன. 'மலரத்துடிக்கும் அவசரத்தில் மொட்டு வெடித்துவிடக் கூடாது'.

தியாகேஸ்வரி (48 வயது), லீலாவதி (45 வயது) என்பவர்கள் திருமணம் செய்து கொள்ளாத காரணத்தால் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உட்பட்டு உள்ளம் பாதிக்கப்பட்டுள்ளனர். வசந்தி (23 வயது) என்பவர் மல்லிகா எனும் பெண் தீயினால் எரியுண்டு இறந்ததையும், பொம்பர் விமானக் குண்டுவீச்சால் ஒருவர் இறந்ததையும் கண்ணுற்று மனம்பாதிக்கப்பட்டுள்ளார். றசீனா (21 வயது) தான் செய்வினையினாலும், மோகனா (22 வயது) தான் தனது தகப்பனின் அடியினாலும் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அவர்களது கூற்றில் எவ்வளவு உண்மை உண்டோ தெரியாது. ''பெண்ணின் மனம் பூவிலும் மெல்லியதன்றோ''

நாகம்மா (20 வயது) கணவன் வீட்டில் இருக்க விருப்பமின்மையாலும், தாய் வீட்டில் வாழ வேண்டும் என்னும் விருப்பத்தாலும், பவானி (20 வயது) என்பவர் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகள் கிடைத்கதால் ஏற்பட்ட அளவுக்கதிகமான கவலையாலும், அதன்பின் எதிர்பாராத விதமாக ஆசிரியத்தொழில் கிடைத்ததால் ஏற்பட்ட அளவுக்கதிகமான மகிழ்ச்சியாலும் உளம் பாதிப்படைந்துள்ளார்.

பெரும்பாலான முக்கிய நோயாளர்களைச்சந்தித்து விட்டு டாக்டர் இந்திராணியுடனும், தலைமைத்தாதியுடனும் மனநோயாளர் பற்றியும், அவர்களுக்கு வைத்தியம் செய்வதிலுள்ள இடர்பாடுகளையும், ஏனைய விடயங்களையும் அறிந்து கொண்டு. உளமருத்துவ சமூக சேவை உத்தியோகஸ்தர் இராஜதுரையையும் சந்தித்து பலவகையான தகவல்களையும் பெற்றுக் கொண்டோம். இறுதியில் சாரதா அக்கா எமக்களித்த குளிர்பானத்தைப் பருகிவிட்டு எமது நேரடி றிப்போட்டை முடித்துக்கொண்டு புறப்பட்டோம்.

மனநோயாளர் வைத்திய சாலையில் நாம் எடுத்துக் கொண்ட தகவலின்படி தற்போதுள்ள போர்க்காலச் சூழ்நிலையே அனேகமான மனநோயாளர்களுக்கு நோய் ஏற்பட அடிப்படையாக அமைந்திருந்ததை உணரமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பார்வையில்

# இலங்கை அணி

முற்றத்து மல்லிகை வாசம் அறியாது என்பார்கள். இது வாழ்க்கைக்கு மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் நிதர்சனமாகி வருகின்றது. ஒருஇடத்தில் புதைந்திருக்கும் திறமைகள் அதைச் சூழ வாழ்கின்ற, ரசிக்கின்ற மக்கள் இடையே புறக்கணிக்கப்படும் போது உலக அளவில் அத்திறமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன.

சமீப காலங்களாக ஏராளமான விளையாட்டு ரசிகர்களின் கவனத்தில் இருந்து வருகின்ற விளையாட்டு கிரிக்கெட். இவ் விளையாட்டு ரசிகர்கள் சில மாதங்களின் முன்னர் தமது காதுகளை வானொலியில் நீட்டி இருந்த நிகழ்ச்சிகளைக் காணக் கூடியதாக இருந்தது. இதற்குக் காரணம் இந்திய அணியின் தென்ஆபிரிக்க விஜயமும், நியூசிலாந்து அணியின் இலங்கை விஜயமும் ஆகும். ஆயினும் பெரும்பாலான ரசிகர்களின் கவனம் இந்திய — தென்ஆபிரிக்க அணியின் விளையாட்டுத்தொடரிலேயே சிரத்தை உடையதாக இருந்தது. இதற்கான காரணம் என்ன?

இலங்கை அணியைக் குறிப்பாகத் தமிழர்கள் புறக்கணிப்பது ஏன்?

விளையாட்டு என்பதோ சாதி, மதம், நிறம் என்பவற்றிக்கு அப்பாற்பட்டது இதையே ஒவ்வொரு ஒலிம்பிக் பந்தயங்களும் நினைவுகூருகின்றன. விளையாட்டுகளை அரசியலோடு இணைப்பதும் இனபேத அடிப்படையில் அதை விமர்சிப்பதும் மனித பண்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்கள். இலங்கைக் கிரிக்கெட் அணியில் பெரும்பான்மை சிங்களவர்களே என்ற பாடம் பெரும்பாலானவர்களினால் ஒப்புவிக்கப்படுகின்றது. கிரிக்கெட்டிற்கு திறமை அடிப்படையிலான தெரிவு என்ற ஒரு தாற்பரியம்

**சிந்துஜா**

இருக்க வேண்டும். இலங்கை அணியில் விளையாடுவதற்கென்று இதுவரை தமிழ் இளைஞர்கள் கூடிய சிரத்தை எடுத்துத் தம்மை வளர்த்துக் கொள்ளவில்லை என்பதும் உண்மையாகும்.

இலங்கையில் சதாசிவம் என்பவர் இலங்கைக் குழுவிற்கும் மலேசியா குழுவிற்கும் அணித் தலைவராகத் திகழ்ந்து உலக சாதனையை நிலைநாட்டியவரல்லவா? அவரது திறமையினால் தானே அவ்வாறு வரமுடிந்தது நீண்ட கால இடைவெளியின் பின்னர் தமிழ் இளைஞரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தையா முரளீதரனின் அணிக்கான வரவு இப்படியான விவாதங்களுக்கு விடைபகரும்.

சிங்களவரின் ஆட்டத்தை நாம் ஏன் புகழவேண்டும் என்ற வாதங்கள் அரங்கேறுமாயின் அண்டாண்டாக நிறவெறியால் ஒதுக்கப்பட்டு வந்த நீக்குரோக்கள் அதிகளவு கொண்ட மேற்கு இந்திய அணியினர் திறமைகளையும் அவர்களது விளையாட்டின் யுத்திகளையும் வெள்ளை ளையர்கள் கேட்டு மகிழவில்லையா? பார்த்து மகிழவில்லையா? இந்தியாவில் சீக்கியர்களை வெறுக்கின்ற இந்துக்கள் மனிந்தர் சிங் விக்கெட் வீழ்த்தும்போது கைதட்டவில்லையா?

'திறமை எங்கிருக்கின்றதோ அங்கு அவன் பகைவன் என்றாலும் பாராட்டத்தெரிந்தவன் தான் மனிதன்'

இதை நாம் நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அதே வேளை மேலும் பல தமிழ் வீரர் தமது திறமையைக் காட்டுவதற்கு, கூடிய சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இதேவேளை அகில இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழு திறமை அடிப்படையில் சாதி, மத வேறுபாடின்றி வீரர்களைத் தெரிவு செய்தால் இன்னும் இலங்கை அணி திறமையடையக் கூடிய சாத்தியம் தோன்றும்.

இதுவே கிரிக்கெட் ரசிகர்களின் அபிலாஷையாகும்.

---


ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் யாழ். முன்னணி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றது.

"ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குச் சிறந்த நிறுவனம்"

ஆண்டு 4, 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை மாதாந்தம் நடாத்தப்படுகின்றன.

"சித்திவேண்டுமா சிந்தித்துப்பார்"

**புதிய கல்வி நிலையம்**


**219, நாவலர் வீதி,**

**யாழ்ப்பாணம்.**


---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுந்திடுவாய்

பூட்டிய விலங் கொடித்து
புதுயுகம் காண வென்றே
கூவுது சேவல் நின்று
கதிரவன் வரவு கண்டு
சிட்டெனப் பறந்து கொள்ள
சிறையினைச் சிதைக்கும் காலம்
கிட்டவே வந்த தென்று
பூவையே எழுந்திடுவாய்.

மாற்றம் (தை - பங்குனி) இதழின் அட்டைப்படக் கவிதைப் போட்டியில் பரிசு பெறும் கவிதை.

பரிசு பெறுபவர்:-
ந. கண்ணன்
யா / உடுப்பிட்டி, அ. மி. கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் பார்வதிநாதசிவம்

இந்த மண்ணிலே பரம்பரையாகப் புலமையை வெளிப்படுத்தும் புலவர்கள் வரிசையில் உதித்த பார்வதிநாதசிவம் இன்றைய ஈழத்து கவிஞர்களுள் புலவர் என்ற தகுதிக்குரியவர்.

வெண்பா முதல் நிலை மண்டில ஆசிரியப்பா வரை மரபுக்கவிதை வடிவங்கள் எல்லாமே ஆற்றொழுக்கான நடையில் இவருக்கு கைவரும். இலக்கணம் தவறாத மரபுக் கவிகளை அமைத்த போதிலும், சாதாரண வாசகர்களுக்குப் புரியக்கூடியவாறு சொற்களைக் கோர்த்தும் வெற்றி கண்டவர்.

சில விஷயங்களை இவரது கவிதைக் கமரா படம்பிடிக்கும் அழகில் ஒரு புதுமையுண்டு. வைத்தியர் ஒருவரைப் பற்றி நோயாளியின் கூற்று .....

"நாடியைப் பார்த்தார் இல்லை
நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்த வாறே
மருந்தினை எழுதித் தந்தார்
நாடியைப் பார்த்துத் தந்தால்
நன்றென்றேன் அயலில் நிற்கும்
லேடியைப் பார்க்க வேண்டும்
லேட் இன்னே செல் செல் என்றார்"

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்திலேயே கவிதை எழுத ஆரம்பித்த புலவர் "நிலபுலனும் செல்வமும் போனாலும் தமிழ் வளர்க்க வேண்டும்" என்று வாழ்ந்த மட்டுவில் ம. க. வேற்பிள்ளையின் பேரன். பண்டிதர் வே. மகாலிங்கசிவம் அவர்களின் மகன்.

இவரின் காதலும் கருணையும் (1972) சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இருவேறு உலகம் (1980) ஆகிய கவிதைத் தொகுதிகளும் இரண்டு வரம் (1985) இன்னும் ஒரு திங்கள் (1988) ஆகிய குறுங்காவியங்களும் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் கதிரேசர் பிள்ளையின் கல்லூரிக் கற்பித்தல் இவரின் கவி ஆற்றலை ஊற்றெடுத்துப்பாய உதவியது. அண்ணாமலைப் பல் கலைக்கழகம் கல்வியால் அது முழுமைபெற்றது. பாவேந்தர் பாரதி தாசன் போன்றோரின் நட்பு, சூழல் இவற்றால் மேலும் மெருகூட்டப்பட்டு உயர்ந்தது.

கவிதை உலகில் மிளிர்ந்த புலவர் பத்திரிகை உலகில் பாராட்டுப் பெற்றவர். கலைக்கண் என்ற திங்கள் இதழில் தொடங்கி ஈழநாடு, முரசொலி என பத்திரிகைப் பணி விரிந்தது.' வாரமலர் ஆசிரியராக இருந்து ''அறிவும் அனுபவமும்'' என்ற பக்கத்தை இவர் ஈழநாட்டில் தொடங்கியபோது வாசகர் மத்தியில் அது பெற்ற வரவேற்பு மறத்தற்கரியது

தொகுப்பு:

**வண்ணையூர் முரசொலி கணேஷ்.**

---

குறைகுடம் கூத்தடிக்கும்: குறைவாகப் பால் தரும் பசு குடிக்தனம் காட்டும்; அரைகுறைப் படிப்புடையவரும் அழகற்றவரும் தாம் தாம் சிறந்தவர்போல் கூச்சலிடுவர்.

— வடமொழிக்கவிஞர்


# பாமோசை வகுப்புகள்

- Drums
- Organ
- Melodika
- Guitar
- வயலின்
- புல்லாங்குழல்
- வீணை
- பாட்டு

ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்பு:- 61, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிராமப் பாதையின் மத்தியில் ஒரு கல் தலையை உயர்த்திக் கொண்டு புதைந்து கிடந்தது. அவ்வழியால் வருவோர், போவோர் எல்லோரும் அதில் அடிபட்டுக் காயமடைந்தார்கள். சிலர் அதில் தடக்கி விழுந்து சென்றார்கள்.

''என்ன அரசாங்கம் இது! இந்தக் கல்லை அகற்றாமல் விட்டிருக்கிறதே!'' என அரசாங்கத்தை நொந்துகொண்டு போனார்களே தவிர, ஒருவரும் அக்கல்லை அகற்றத் துணியவில்லை.

அதில் அடிபட்டுக் கொண்ட ஒரு முதியவர், 'பாவிப் பயல்கள் பிறந்த இந்த ஊரிலே இந்தக் கல்லை எடுத்துப் போட நாதியில்லையே'! என்று சாபமிட்டாரே தவிர, அவரும் அதை அகற்றவில்லை.

இரவில் மாறுவேடம் தரித்து நகர சோதனை செய்து வந்த அவ்வூர் அரசன் இதையெல்லாம் கவனித்து வந்தான். ஒரு நாள்

# நாட்டுப்பற்று

குட்டிக் கதை

இரவு அந்தக் கல்லைப் பெயர்த்து அதனடியில் தன் அரச சின்னம் பொறிக்கப்பட்ட முத்திரையையும், சில பொற்காசுகளையும் வைத்து அதன் மீது முன்பு இருந்தபடியே கல்லை வைத்து விட்டுச் சென்றான்,

பல நாட்களின் பின்னர் ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் ஒரு நாள் தட்டுத்தடுமாறி அப்பாதை வழியாக வந்தான். அக்கல்லில் தடக்கி விழப்பார்த்தான். ஆனால் விழுந்து விடவில்லை. தன்னுடைய நிலை மற்றவர்களுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று எண்ணி, மெது மெதுவாக சுற்றியிருந்த மண்ணை அள்ளியெடுத்து, அந்தக்கல்லை அப்புறப்படுத்தினான். அதனடியில் இருந்த அரச முத்திரையையும், பொற்காசுகளையும் கண்டதும் அவனுக்கே கிலி பிடித்துக் கொண்டது. அவற்றை எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அரசனைக் கண்டு அவற்றைக் கொடுத்தான்.

''இவ்வளவு மக்கள் வாழும் இந்த ஊரிலே, அரசாங்கத்தைப் பழித்தும், சாபமிட்டும் சென்றார்களே ஒழிய உன்னைப்போல் கடமையைச் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. அதனால் இந்தப் பொற்காசுகளை நீயே வைத்துக்கொள்'' என்று திருப்பிக் கொடுத்து விட்டான் அரசன்.

அந்தப் பிச்சைக்காரன் அளவில்லா மகிழ்ச்சியடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் போட்டி-3

1) உலகப் புகழ்பெற்ற உரோமப் பேரரசனான ஜூலியஸ் சீசர் தன்னுடைய பரந்து விரிந்த இராச்சியத்தைச் செவ்வனே ஆள ஒரு தமிழ் நூலையே துணையாகக் கொண்டிருந்தான். உலகின் பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ள அந்நூல் எது?

2) "ஒரு நாளாவது நான் இந்தியாவின் பிரதமராக இருக்கவேண்டும்" எனப் பதவி வெறிகொண்ட ஒருவர் இந்தியாவின் 9 வது பிரதமராகினார். பின்னர் இவர் பதவி கவிழ்க்கப்பட்டார். அவர் யார்?

3) சில ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த "பாலைவனப் புயலில்" (Oparation desert storm) ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகளால் இஸ்ரவேலின் ஒரு புனித நகரம் தாக்கப்பட்டது. இந்நகரம் உலகின் ஒரு சமயத்தின் பெருமதிப்புக்கும் பக்திக்குமுரிய இறைகுமாரன் பிறந்த இடமாகும். அந்தப் இறைகுமாரன் யார்? அந்த நகரம் எது?

4) ஓர் உலகப் புகழ்பெற்ற விடுதலை வீரன் தமிழீழத் தலைவர் பிரபாகரனுக்கு ஒப்பிடப்படுகிறார். இத்தாலியின் விடிவிற்கு காரணமாயிருந்த அவ்வீரன் யார்?

5) உலகப் புகழ்பெற்ற உள்ளக விளையாட்டாகிய சதுரங்கம் (Chess) பிரித்தானியராலேயே உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இவ்விளையாட்டு தென்னாசிய நாடொன்றின் பூர்வீக விளையாட்டாகும், அந்நாடு எது?

நன்றி: தமிழ்த்தாய் மன்றம்

(உங்கள் விடைகளை 25 - 6 - 1993க்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பிவையுங்கள். சான்றிதழ்கள் வழங்கப்படும்.)

## சான்றிதழ் பெறுபவர்கள்:

யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 1) ந. கோபிநாத், 2) ம. துஷ்யந்தன் 3) வே. வேலவன் 4) து. பிரசாந்தன், 5) ச. பிரசன்னா, 6) ஆ. நந்தினி, கொக்குவில். 7) ஆ. கஜேந்திரன், கொக்குவில் 8) அ. கோபிகா, உடுவில். ம. க. 9) ப. சிவதீபன் யாழ்ப்பாணம் 10) து. சுஜேந்திரமோகன், செங்குந்தர். இ. க, 11) இ. சந்திரிகா, யாழ்ப்பாணம். 12) லோ. ஜெயதரன் கொ. இ. க 13) எஸ். றாஜ்குமார், தெல்லிப்பளை. 14) பு. செந்தில்நபன், யாழ்ப்பாணம். 15) பு. நந்தினி, வேம்படி. ம. க. 16) ந. ஊர்மிளா, யா / இ. ம. க. 17) உ. சுரேன், கோண்டாவில் இ. ம. வி.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிங்... டிங்... வண்டி...
# சைக்கிள் வண்டி

இன்று யாழ்நகரில் பாரிய வீதி விபத்துக்கள் மிகவும் குறைந்துள்ளதன் காரணம் எரிபொருள் தட்டுப்பாட்டால் மோட்டார் வாகனங்கள் முடக்கப்பட்டுள்ளமை ஆகும். எனினும் சைக்கிள்களே பெருமளவில் விபத்துக்குள்ளாகின்றன.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், அலுவலகத்துக்குப் போவோர், கடைக்குச் செல்வோர் என ''சைக்கிள்'' பாவிப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

''சைக்கிள்'' ஓட்டும் பெண்மணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்லுகிறது. குறிப்பாக மாணவிகள் பெருமளவில் சைக்கிளைப் பயன்படுத்துகிறார்கள்.

''சைக்கிளைப்'' பயன்படுத்துவதில் பல வசதிகள் இருக்கின்றன. முதல் வசதி நமது வீட்டில் இருந்தே ''சைக்கிள்'' பயணத்தைத் தொடரலாம். நாம் செல்லவேண்டிய இடத்தின் வாசல்வரை சைக்கிளிலேயே போய் இறங்கிக் கொள்ளலாம்.

பஸ்ஸுக்கு காத்து நிற்க வேண்டியது இல்லை. நேரம் மிச்சம், பஸ்காசும் மிச்சம், நீங்கள் கார் அல்லது மோட்டார் சைக்கிள் வைத்திருப்தால் மண்ணெண்ணெய் ஊற்ற வேண்டும். மாட்டு வண்டியினை வைத்திருந்தாலும் மாட்டுக்கு வைக்கோல் போட வேண்டும். ஆனால் ''சைக்கிளுக்கு'' அவ்வாறான செலவு இல்லை.

இன்று சைக்கிள் பல வழிகளிலும் யாழ்நகர் மக்களுக்கு உதவியளிக்கிறது. போக்குவரத்துவசதி குறைந்த இந் நேரத்தில் குடும்பத்தில் அனைவரும் பயணம் செய்யவும், அரிசி மூடை, விறகு, ஏன்? பிரேதப் பெட்டி கட்டக்கூட சைக்கிளைப் பயன்படுத்தும் அவலநிலை எம் மண்ணில் காணப்படுகின்றது.

சைக்கிள் ஓடுவது மிகச் சிறந்த உடற்பயிற்சி. சைக்கிள் ஓட்டுவது இரத்த ஓட்டத்தை சீர் செய்கின்றது. கொழுப்புச் சத்துக்களைக் குறைக்கிறது. கால், கைகளை நன்றாக இயங்க வைக்கின்றது. சைக்கிள் ஓடுவதால் ஊளைச்சதைகள் இல்லாது போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக சைக்கிளில் பல வசதிகள் இருந்தாலும் அதனை ஓட்டுபவர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டியது அவசியம்.

இப்பொழுது நாம், தலை போகும் வேகத்தில் 'சைக்கிளில்' வருபவரைப்பார்க்கிறோம். அருகருகே ''சைக்கிளில்'' செல்பவரைப் பார்க்கிறோம். இன்னும் சிலர்; யாரும் நண்பர்களைக் கண்டுவிட்டால் நடுவீதியில் சைக்கிளோடு நின்று கதைப்பதைப் பார்க்கிறோம். சிலர் அளவுக்கதிகமாக சைக்கிளில் ஆட்களையோ, பொருட்களையோ, ஏற்றிச்செல்வதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இரவில் விளக்கு இல்லாத சைக்கிள்கள் யாழ்நகரில் ஏராளம் சிலர் பிரதானவீதியில் நுழையும் போது உச்ச வேகத்தில்வந்து பிரவேசிப்பார்கள் இவர்கள் பிரதானவீதியில் வரும் வாகனங்களுடன் மோதுறுவதும் நாம் அன்றாடம் காணும் நிகழ்ச்சி வெற்றைவிட பக்கம்மாறி ஓடுவோரும், பராக்குப் பார்ப்போரும், கையைவிட்டுவிட்டு ஓடுவோரும் இருக்கவே செய்கின்றனர். இவை எல்லாம் நல்லவை அல்ல.

**க. கஜரூபன்.**

1951ம் ஆண்டின் 14ம் இலக்க மோட்டார் வாகனப் பாதுகாப்புச் சட்டத்தின் 170ஆம் பிரிவின் கீழ் வகுக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் சைக்கிள் ஓட்டிகளுக்கு,

1. ஒருவர் பின் ஒருவராக ஓட்டிச் செல்லவும். இருவர் அல்லது அதிகமான பேர் ஒருவர் பக்கத்தில் ஒருவராக ஒரு பொழுதும் ஓட்டிச் செல்ல வேண்டாம்.
2. வீதியில் இங்கு மங்கும் மாறி மாறி ஓடவேண்டாம்.
3. வாகனங்கள் போக்கு வரத்துத் தடைப்பட்டிருக்கும் போது வண்டிகளுக்கு இடையே இருக்கும் அற்ப இடைவெளியில் நுழைந்து உங்கள் வண்டிகளை ஓட்ட வேண்டாம்.
4. வேறு வாகனத்தைப் பிடித்துக் கொண்டு பயணம் செய்ய வேண்டாம்.
5. உங்கள் அளவுக்குப் பெரிதான 'சைக்கிளை' ஓட்ட வேண்டாம்.
6. ''சைக்கிள்'' உங்களுக்கு கால் ஊன்றி நிற்பாட்டும் அளவில் இருப்பின் மட்டும் பிறரை அதில் ஏற்றவும்.
7. மற்றவர்களுக்கு இடைஞ்சலான முறையில் சாமான் ஏற்ற வேண்டாம்.
8. திருப்பங்களில் சைகைகளைத் தவறாது பிரயோகிக்கவும்.
9. (பிறேக்) தடுப்பியைத் தங்கு தடையின்றி பிடிக்கக்கூடியவாறு பூட்டி வைக்கவும்.
10. பின்புற 'ரிபிளெக்டர்' சுத்தமாக இருத்தல் வேண்டும்

★ அவதானம் பிரதானம் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாத மேடை

## "சமூகம் ஓர் கொடிய பிசாசைப் போன்றது"
## இக்கூற்றுக்கு எதிரான கருத்து

ஓர் பூரணமான மனிதனை உருவாக்குவதில் சமூகம் கொண்டுள்ள பங்கு உன்னதமானது. ஒருவன் நல்ல நிலையை அடையவோ அன்றேல் தீய வழிகளில் செல்லவோ காரண மாயிருப்பது சமூகம். ஒருவன் கொடிய வழிகளில் சென்று தீயவனாக மாறுவதை ஒரு நல்ல சமூகத்தால் முற்றிலும் மாற்றியமைக்க முடியும். அவன் முன்னேற வேண்டும் என்ற ஆசையில் முன்னேற்றமான காரியங்களில் ஈடுபட முற்பட் டாலும் அவன் வாழும் சமூகம் தீய சமூகம் எனின் அவ னால் முன்னேற முடியாது சமூகத்தால் தான் அவனைமுன் னேற்ற முடியுமே தவிர வேறொன்றும் பயன்தராது. ஒரு மாணவன் படித்து முன்னேற வேண்டுமாயின் அவனுக்கு அவனது பெற்றோர் ஊக்கமளிக்க வேண்டும். அவனது பெற்றோரே அவனது சமூகம் அவ்வாறின்றி பெற்றோரே அவனுக்கு தீய சமூகமாக மாறின் அவனால் எவ்வித முயற்சியாலும் வெற்றிபெற முடியாது.

**சமூகம் கொடிய பிசாசு அல்ல.**

ந. கோபிநாத்
ஆண்டு 10 B
யாழ். இந்துக் கல்லூரி.

---

**வாசகர்களே!**

மாற்றம்: 02 இல் வெளியான வேண்டுகோளுக்கிணங்க "சமூகம் கொடியபிசாசைப் போன்றது" என்பதற்கு ஆதர வானதும் எதிரானதுமான கருத்துக்கள் எமக்குக் கிடைத் தன. எதிரான ஒரு கருத்தை இங்கு பிரசுரித்துள்ளோம் நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள் பிர சுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதம்

● "ஊருக்கொரு சுந்தரி" மூலம் நம் நாட்டிலுள்ள சுந்தரி மார்களையெல்லாம் அறிமுகப் படுத்துவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

ந. தேவசு,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

● தமக்கென்று தனியான எழுத்தாளர் வட்டத்தையும், வாசகர்களையும் கொண்டு விளங்கும் நிலையில் "மாற்றம்" பக்கச் சார்பில்லாமல் வெளிவருவது பாராட்டத்தக்கதாகும்.

க. ஜீவகாருண்யம்,
கஸ்தூரியார் வீதி.

● யப்பீஸ்மக்கள், தொடர் மாடியின் அவலங்கள், ஊருக்கொரு சுந்தரி போன்ற கட்டுரைகள் சிறப்பாகவிருந்தன.

மெ. கஜன்,
யா / கனகரட்ணம் ம. ம. வி.

● கூர்பின் பாதையில் காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டு உங்கள் சஞ்சிகை உன்னதமான நிலையை அடைய என் வாழ்த்துக்கள்.

வான்மேகம்.

● பொருளாதார நெருக்கடியான இச்சூழ்நிலையிலும் "மாற்றம்" எனும் ஓர் அறிவினை வளர்க்கும் சஞ்சிகை வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அ. அருந்தவச்செல்வி,
உரும்பராய்.

● பேனா - நண்பர்கள் பகுதியில் சிலமாற்றங்கள் தேவைப்படுவது போல் உள்ளது.

பு. செந்தில்ரூபன்,
யாழ்ப்பாணம்.

● குறுக்கெழுத்துப் போட்டி: 02 ல் மேலிருந்து கீழ் இலக்கம் 01 இல் செந்தன்மை என்பதா செந்தண்மை என்பதா சரியானது என அறியத்தாருங்கள்.

ம. பிறேமலதா,
மண்டைதீவு.

● க. டர்சிகாவின் "சிறகொடிந்த பறவைகள்" என்னும் சிறுகதை மிகவும் பிரமாதமாக இருந்தது.

ந. நாகினி,
யாழ்ப்பாணம்.

● குறுக்கெழுத்துப் போட்டியின் முடிவுகளை வெளியிடவும்

லோ. ஜெயகுரன்,
கொக்குவில் இ. கல்லூரி.

● மாற்றம் சஞ்சிகையை ஒரு காலாண்டு சஞ்சிகையாக வெளியிடுகின்றீர்கள். இதை ஏன் நீங்கள் ஒரு மாதாந்த சஞ்சிகையாக வெளியிடலாகாது ?

இ. சந்திரிகா,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகம்

“அண்ணா அண்ணா... ஏன் இண்டைக்கு எட்டுமணியாகியும் எழும்பாமல் படுத்திருக்கிறாய், ஒன்பது மணிக்கு லெக்ஸர் என்றல்லே சொன்னனி” என்று சோம்பலாகப் படுத்திருக்கும் கரனை எழுப்பினாள் அவனது தங்கை சுதா.

‘எனக்கு இண்டைக்கு உடம்பு சரியில்லை’ என்றபடி கரன் படுத்திருந்த கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான். பின்னர் நித்திரைச் சோம்பலை முறித்துக் கொண்டு அறையை விட்டு வெளியே பல்கனிக்கு வந்தான். வழமையாக அவன் இயற்கைக்கன்னியின் எழில் மேனியை தனை மறந்து ரசிப்பதுண்டு. ஆனால் சில நாட்களாக அவனது உள்ளம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பதால், அவனால் இயற்கையை முழுமையாக ரசிக்கமுடியவில்லை. ஆனாலும் தனது பார்வைக் கதிர்களை பூமாதேவிமேல் படரவிட்டான். அழகிய பறவைகள், மிருகங்கள், செடிகள், கொடிகள், மேடுகள் பள்ளங்கள், மலைகள் அகழிகள், நீர்வீழ்ச்சிகள், சாக்கடைகள், மாளிகைகள், குடிசைகள், கோயில்கள், குப்பைமேடுகள் இப்படி எத்தனை எத்தனையோ அங்கங்களை மேனியில் சுமந்தவாறே பூமாதேவி சிரித்துக் கொண்டிருந்தாள்.

கரனது மாடிவீட்டைச் சுற்றி அழகிய பூந்தோட்டம் அவர்களது செல்வச் செழிப்புக்கு வரைவிலக்கணம் கூறிக்கொண்டிருந்தது. அதற்கருகே அமைதியான நீரோடை. அப்பால் வெடித்துச் சிதறும் பருத்திகளைத் தலையிலே சுமந்துகொண்டு பச்சைப் பசேலென்ற பருத்தித்தோட்டம் அதன் நடுவிலே இரண்டு வேப்பமரங்கள் குடை பிடித்து நிற்க, நான்கு தடிகளிலே தங்கி நிற்கும் பனையோலைக் குடிசை. குடிசையின் பக்கங்களை மறைப்புக்காக பாதி பின்னியும் பின்னாதுமான தென்னோலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. வாசலுக்குக் கதவாக ஆடிக்கொண்டிருந்த பனைமட்டை வரிச்சை தூக்கிச்சாத்தியபடியே குறுக்குக்கட்டோடு தலையிலே

**சுதா**

தண்ணீர்க்குடத்தைச் சுமந்தவாறே வயதின் தொன்மையையும், வறுமையின் வாட்டத்தினையும் உடலிலே சுருக்கங்களாகக் கொண்ட பார்வதி வருகின்றாள். அவளது கடுக்கன் போட்டு தொய்ந்துபோன காது ஊசலாடிக்கொண்டிருந்தது. அவள் உடுத்தியிருந்த நூற்சேலையில்

## சிறுகதை

நெய்யப்பட்ட நூல்களிலும் கிழிந்த ஓட்டைகளை மறைக்கத் தைக்கப்பட்ட நூல்கள் அதிக மாக இருந்தன.

பார்வதிக்கிழவி நீரோடையை நோக்கி நடக்கின்றாள். நீரோடையின் கரையினிலே தான் அணிந்திருந்த உடைகளை தோய்த்து உலரவிட்டுவிட்டு கரடு முரடான கறுத்தப் பாறாங்கல்லிலே வெள்ளையன்னம்போன்ற மீனா தனது காந்தள்க்கரங்களில் நாடியைச் சுமந்தவாறே யோசித்துக்கொண்டிருந்தாள். கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் உதிர்ந்துகொண்டிருந்தன. அந்த வேளையில் 'அடியே மீனா என்னடி எப்பபார்த்தாலும் யோசிச்சிட்டிருக்கிறாய்.... நடந்ததுகளை கெட்ட கனவுபோலமறந்துடடி...... எழும்பு சீக்கிரமா குளிச்சிட்டு பானையிலை கஞ்சிகாய்ச்சி உறியில வைச்சிருக்கேன் போய்க் குடி ' என பேர்த்தியைப் பார்த்துக் கூறிக்கொண்டே பார்வதிக் கிழவி வந்தாள்.

இந்தக் காட்சியை மாடியில் நின்றவாறே கரன் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அண்ணனிடம் பாலைக்கொண்டு வந்து நீட்டியபடியே ''அண்ணா நடந்தவை நடந்து முடிந்து விட்டன இனிமேல் நடக்க வேண்டியதைப் பார் . என்றபடி நீரோடைப் பக்கம் பார்த்தாள் சுதா. ''அங்கே பார் அண்ணா மீனா எப்ப பார்த்தாலும் யோசிச்சுக்கொண்டே இருக்கிறாள். அவளின்ர தலையிலையும் ஆண்டவன் இப்படியா எழுதிப் போட்டான். எவ்வளவு அடக்க ஒடுக்கமாக வாழ்ந்தவளுக்கு எங்கட அப்பாவால எவ்வளவு அவலம் ஏற்பட்டுப்போச்சு எங்களிட்டை படிப்பிருக்கலாம், அளவு கடந்த பணமிருக்கலாம், உயர்சாதிக் கர்வம் இருக்கலாம். இதற்காக மற்றவர்களின்ரை வாழ்க்கைகளை பாழ்படுத்துவதா'... சீ கேவலம் கெட்ட செயல். மீனாவின் வயதுடைய மகளொன்று இருக்கண்டு அப்பா சிந்தித்துக்கூடப் பார்க்கல்லையே ......'' விழியோரம் வடிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள் சுதா. ''அப்பா செய்த செயலை றோட்டில குடிச்சிட்டுத் திரிகிற காவாலிகள் செய்திருந்தால் பரவாயில்லை ஒரு பெரிய ஸ்தானத்தில் கல்வி அதிகாரி என்ற உயர் பதவியில் இருந்து கொண்டு எவ்வளவு கீழ்த்தரமான செயலைச் செய்திருக்கிறாரே '' என தானும் கவலையுடன் பேசினான் கரன்.

கரனும் சுதாவும் பேசிக்கொண்டிருந்தவேளை அவர்களின் அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்மாவான பூமணி நரைத்த தலைக்கு டைபூசியபடி வந்து 'என்ன இரண்டுபேரும் அந்தக் கேடுகெட்டதுகளைப் பற்றி இரக்கமாகக் கதைச்சுக்கொண்டு நிற்கிறியள். உங்களுக்கு உங்கட கொப்பரைக்காட்டிலும் அவனை வெட்டிக் கொலைசெய்த ஆக்கள் மேல என்ன அவ்வளவு இரக்கம். உந்தப் பார்வதியையும், மகள் கமலத்தைப்பற்றியும் ஊரில விசாரிச்சுப்பார்த்தால் தெரியும். அந்தப்பரம்பரையிலவந்த உவள் மீனா படிப்பு, காசு, சாதி எல்லாம் இருக்கெண்டு கொப்பரை யுமல்லே பிடிக்கப்பார்த்தவள். அது முடியாமல்போக இல்லாத பழியெல்லாம் சுமத்தி அவனைக் கொலைசெய்ததுகளைப்பற்றி ஏதோ பெரிசாக் கதைக்கிறியள்...' என்று வாய்க்குவந்தபடி கத்தினாள் பூமணி. ''நிறுத்துங்கோ அப்பம்மா ... உங்கடை மகன் தலையும் நரைக்கக் கொடங்கினபிறகு தன்ரை பிள்ளைக்குச் சமனான மீனாவின்ரை அழகில ஆசைப்பட்டது எவ்வளவு வெட்கக்கேடானது அது மாத்திரமல்லாது அவளின்ரை அனுமதியில்லாமல் அவளை அனுபவிக்க நினைச்சதை சரியென்றே சொல்லுறியள். தன்னை பலாத்காரப்படுத்த முற்பட்ட பிசாசை தற்பாதுகாப்புக்காகக் கொன்றதை பிழையென்றே சொல்லுறியள். எங்களுக்கு அப்பாவாக இருக்கலாம். ஆனால் மீனா கொடுத்த தண்டனை சரியே ... இனிமேலாவது அப்பாமாதிரி அநியாயமான முறையில பெண்களை அனுபவிக்க நினைக்கிறவர்களுக்கு இது ஒரு நல்ல படிப்பினையாக ஆகட்டும்'' என்று ஆவேசமாகக் கத்தினாள் சுதா.

அப்போது குடிசைக்குள்ளிருந்து கோயில் திருவிழாவுக்கு கச்சான் விற்பனை செய்வதற்காக தலையிலே கச்சான் பெட்டிகளைச்சுமந்துகொண்டு தனது வயதின் முதுமையை விளக்கு முகமாக எலும்பும் தோலுமான உடலுடன் காய்ந்த தடியொன்றை ஊன்றியபடி சருகாக அவள் நடந்துகொண்டிருந்தாள். அவள் சருகாகியபின்பும் ஒரு ஜீவனுக்கு நிழல்கொடுக்க முயன்றுகொண்டிருக்கிறாள். அவளுடைய ஓயாத உழைப்பு முயற்சிக்கு ஓய்வுகொடுக்க யாருமில்லை. அவள் ஓய்ந்துவிட்டால் அவர்களது சுவாசிப்பானை காய்ந்துவிடும். உலகமேனும் சில வேளை ஓய்வெடுக்க முயற்சி செய்யும். ஆனால் அவளுக்கு ஓய்வில்லை. பேர்த்தியை உழைப்பிற்கு அனுப்பிவிட்டு மீனா வாசலிலே ஓடித்திரிந்த நாய்க்குட்டிகளை துரத்தியவாறே கறையானுக்கு உணவாக்கிக் கொண்டிருக்கும் ஓலைத்தட்டியடைப்பில் கையைப்பிடித்துக் கொண்டு தனது வாழ்க்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரத்தை நினைத்து தனை மறந்து அழுதும்விட்டாள்.

மீனா மனத்திரையிலே விழுந்த படமான துயரங்களைச் சுமந்த வாறே நீரோடையின் அருகில் முட்செடிகள் மேல் உலரவிட்ட ஆடைகளை எடுத்துக் கொண்டு மாற்றி அணிவதற்குச் சட்டையில்லாமல் துவாய்த்துண்டை உடுத்தியிருந்த அந்த அழகுச் சிலை உடைமாற்ற குடிசைக்குள் சென்றது. பருத்தித்தோட்டத்திற்குச் காவலாக அமர்த்தப் பட்ட அந்தக்குடும்பம் மாற்றியணிவதற்கே உடுப்பில்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. கந்தலாடைகளையே உடுப்பினும் மீனாவெனும் அழகுமயில் எப்போதும் சொர்க்கலோக தேவதை போல் காட்சியளிப்பாள். அவளுடைய குளிர்மையான கொடி போன்ற உடலுக்கும் மலர்ச்சியான வதனத்திற்கும் ஆடையொரு பொருட்டல்ல.

வெளிறிப்போன பூப்போட்ட பருத்திச் சட்டையை அணிந்து கொண்டு மாடுகள் கட்டப்பட்டிருந்த வேப்பமரத்தடிக்கு குடிசைத் தரையை மெழுகுவதற்கு சாணம் எடுக்கச்சென்றாள். அங்கே மாடுகள் ஒழுங்கான உணவின்றி ஒட்டிய வயிறுகளுடன் மூர்க்கமாக நின்றன. மீனாவென்ற புள்ளிமான் சாணத்தை அள்ளுவதற்காக குனிந்தாள். அப்போது.... பெரிய காளைமாடு தனது பின்னங்காலினால் ஓங்கி அடித்துக் விட்டது. அந்த வெள்ளைப் புறா அம்புபட்டது போல் விழுந்து துடித்தது. அந்தப் பெண்குயில் குரல் அடைபட்டு வேதனை தாங்க முடியாமல் கதறியது. மீனா என்ற தேவதை வேதனையால் கதறிக்கொண்டிருக்கிறாள். ஆனாலும்துணைக்கு அண்மையில் யாருமில்லை. மனித சஞ்சாரமற்ற அந்தப்


**எமது வெளியீடுகள்:**

'தமிழ்த்தென்றல்' யாதுமூரானின் கவிதைகள்
ரூபா: 20-00

இலகு தமிழ் இலக்கணம் (திருத்தியபதிப்பு)
எல்லாவகுப்புகளுக்கும் ஏற்றது. ரூபா: 20-00
ஆக்கம்: யாதுமூரான்

இலகு ஆங்கிலம் **ENGLISH MADE EASY**
ஆண்டு 4, 5, 6 வகுப்புகளுக்கு
பதிப்பாசிரியர்: யாதுமூரான் ரூபா: 19 50




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்தோட்டத்து மத்தியில் யார் வருவார்? ஆனால் அவளால் அன்பாக வளர்க்கப்பட்ட நாய்க்குட்டிகள் மட்டும் அவளது வேதனையை உணர்ந்து அவளைச்சுற்றி நின்று நக்கிக்கொண்டிருந்தன. வெய்யிலிலே வெடித்துப்பறக்கும் பஞ்சுகள் தான் அவள் உடலுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தன.

மீனா அலறிக் கொண்டிருப்பதை மாடியில் நின்றவாறே சுதா கண்டுவிட்டாள். மீனாவின் வேதனைக்குரலை அவள் கேட்டுவிட்டாள். உடனே தனது அண்ணன் கரனை அழைத்துக்கொண்டு நீரோடையின் மேல் கட்டப்பட்டிருந்த கயிற்றுப்பாலத்தில் நடந்து மீனாவின் அருகில் சென்றாள் மீனா வேதனையால் புழுவாய்த் துடித்துவிட்டு மயக்க நிலையை அடைந்து கொண்டிருந்தாள். அவளைச் சுதா தூக்கமுயற்சித்தாள் முடியவில்லை. மீனா கொம்பை இழந்த கொடிபோல சோர்ந்து வீழ்ந்தாள். பின்னர் கரன் தனது இரும்புக்கரங்களால் அவளை லாவமாகத் தூக்கிக் கொண்டு அருகிலிருந்த வைத்தியசாலைக்கு கொண்டு சென்றான் சுதாவும் கூடச் சென்றாள். அங்கே வைத்தியம் பார்க்கப்பட்டது.

வைத்தியசாலையில் நிற்கும் போதே கரன் ஒரு முடிவு எடுத்துக்கொண்டான். எவ்வளவு படிப்பு, பணம், குலப்பெருமை எல்லாம் இருந்தாலும் அவன் தலைக்கனமேறி வாழவில்லை. அவன் இந்த உலகிற்குத்தேவையான மானுடத்தை சிந்தித்தான் நீதியை நேசிக்கிறவன் எனும்வகையில் தன்னுடைய தகப்பனால் வாழ்வழிந்த மாசற்ற மீனாவுக்கு வாழ்வு கொடுக்க முடிவுசெய்தான். இந்த தீர்மானத்தை தனது அருமைத் தங்கைக்கு வெளிப்படுத்தினான். அவளும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள்.

மீனாவுக்கு சிகிச்சை முடிந்த பின் அவளுக்கு தனது முடிவைக் கூறினான். அவளது உள்ளம் எதிர்பாராத ஒன்று நிறைவேறுவதையிட்டு ஆனந்தத்தில் துள்ளிக்குதித்தது. அவள் மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தாள். அத்தக் காளையும், மயிலும் ஒன்றுசேர்ந்தன. அந்த மலையும் மடுவும் இணைந்துகொண்டன. சேரமுடியாது என கருதப்படும் துருவங்கள் இரண்டும் ஒன்றாகின. சேரக்கூடாது என சமூகத்தினால் ஆணிபோட்டு பூட்டிவைக்கப்பட்ட தண்டவாளங்கள் இரண்டும் ஒன்றுடன்ஒன்று ஒட்டிக் கொண்டன. இதனால் போலி வேஷங்களாக உலாவந்த சமூகக் கோட்பாட்டு ரயில்கள் தடம் புரண்டு வீழ்ந்து அழிந்துகொண்டன. சமுதாயத்திற்கு கரனுடைய தியாகம் ஒரு புதிய பாதையை திறந்துவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனா நண்பர்கள்

**அ. சுதர்ஷன்**
தொழில் நுட்பக்கல்லூரி
முன்பாக,
பீறவுன் வீதி' யாழ்ப்பாணம்.
வயது : 16

**பா. பாலேந்திரன்**
காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.
வயது : 28

**சி. சுகந்தி**
5ம் வட்டாரம்,
மண்டைதீவு.
வயது : 18

**ஜீ. செல்மர் எமில்**
237, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
வயது : 18

**ம. ஜெயறூபன்**
108 / 3, கச்சேரி நல்லூர் றோட்,
நல்லூர்.
வயது : 15

**இ. சந்திரிகா**
842, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
வயது : 16

**க. தர்ஷினி**
மே / பா / சி, கணபதிப்பிள்ளை
சேச்லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
வயது : 20

இவர்கள் உங்களைப் பேனா — நண்பர்களாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறார்கள், தொடர்பு கொள்ளுங்கள். நீங்களும் உங்கள் பெயர் விபரங்களுடன் ரூபா 5.00 பெறுமதியான முத்திரையை அனுப்பிவைப்பதன் மூலம் மாற்றத்தின் இப்பக்கத்தில் உங்கள் பெயரை பிரசுரிக்கமுடியும்.

# சுருட்டியின் பதில்கள்

○ **ம. றூபன்**, நல்லூர்.
பெண்கள் சிலர் தலைமுடியை ஏன் முடியாமல் திரிகிறார்கள். அவர்களால் முடியவில்லையா?
முடியாமலல்ல முடியில்லை.

○ **ப. வதனி**, அல்வாய்.
அம்மையாரின் ஆட்சிவந்தால்..
அடியவர்கள் துண்டுகட்டவேண்டும், ஆண்டவர்கள் துண்டு விரிக்க வேண்டும்.

○ **சு. சேகர்**, உடுவில்.
பெண்களைக்கண்டால் ஏன் பேயும் இரங்குகின்றது?
இனம் இனத்திற்கு இரங்கும்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரங்கி (CANNON)

பீரங்கி என்பது ஒருவகைப் பெரிய துப்பாக்கியாகும். இதனை தனியொருவர் தூக்கிச் செல்ல இயலாது. இதனால் பாரிய வாகனங்களில் ஏற்றியே போர்களில் பயன்படுத்துவார்கள் பீரங்கியினால் பகைவாது இலக்குகளைக் குறிதவறாமல் தாக்கமுடியும். இதனால் தற்போதைய போர்களில் பீரங்கி முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.

முதன்முதலாக 1327 லே இங்கிலாந்தில் மூன்றாம் எட்வேட் காலத்தில் ஸ்கொட்லாந்துடன் நடந்த போரில் பீரங்கி பயன்படுத்தப்பட்டது. பெரிய பீரங்கிகளை உருவாக்கி 1350 ல் பிரான்சியர் பீரங்கிப்படை என்ற தனிப் படைப்பிரிவை உருவாக்கினர். முதலில் இரும்புச்சட்டங்களைக் குழாய் போலப் பிணைத்து அதற்கு இரும்புப்பூண்கள் போட்டு பீரங்கி செய்தனர். பின்னர் ''பீரங்கி வெண்கலம்'' எனும் உலோகத்தினால் பீரங்கி செய்தனர். முதலில் நிலையாக நிறுத்திவைத்து போர்களில் பயன்படுத்தினர். பின்னர் வாகனங்களில் பொருத்தி பீரங்கியை வேண்டிய கோணத்திலும், வேண்டிய திசையிலும் பயன்படுத்தும் வகையில் தயாரித்தனர். இரண்டாம் உலகமகா யுத்தத்தில் விமானத்தில் ஏற்றிச் செல்லக்கூடிய பீரங்கிகளைத் தயாரித்தனர். அப்போது சுமார் 15,000 மீற்றர் உயரத்திற்கு குண்டுகளை வீசக்கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் தயாரிக்கப்பட்டன.

தற்காலத்திலே பீரங்கிப்படை என்பது முக்கியமான படைப் பிரிவுகளில் ஒன்றாக விளங்குகிறது. ஒரு நாட்டின் காலாட் படையின் பலத்தினையும், பலவீனத்தினையும் நிர்ணயிக்கும் அளவுக்கு பீரங்கிப்படை திகழ்கிறது. எந்தஒரு படைஉள்ள நாட்டிற்கும் பீரங்கிப்படை மிகவும் இன்யறிமையாததாகும் பீரங்கிப்படையின்றி எந்தஒரு காலாட்படையும் பெரும்போர்களுக்கு முகம்கொடுக்க இயலாத நிலையே ஏற்படும். ஏனெனில் பீரங்கிப்படை காலாட்படையினரை எதிரிகளிடமிருந்து காப்பதற்கும், எதிரிகளில் இலக்குகளை அழிப்பதற்கும் இன்றியமையாத படையாகிவிட்டது.

**கர்ஷிகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தாய் மன்றம் அறிமுகப்படுத்தும்

### இந்த ஆண்டுக்கான

# தேசாபிமானி யார்?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். இன்றைய போர்க் கால சூழ்நிலையில் பொது நலனையே கருத்திற்கொண்டு மக்களுக்குப் பணியாற்றுகின்ற மனிதன் யார்? அவர் ஆற்றும் பணி என்ன? போன்ற விபரங்களை அனுப்பி வையுங்கள்.

நடைபெறும் சுற்றுக்களில் அதிகப்படியான ஆதரவுச் சீட்டுக்களைப் பெறுபவர் '1993 ம் ஆண்டுக்கான தேசாபிமானி' யாகக் கௌரவிக்கப்படுவார்.

**போட்டி விதிகள் :**

1. போட்டிகள் ஒவ்வொரு காலாண்டுக்குமாக மூன்று சுற்றுக்கள் நடைபெறும்.
2. 'மாற்றம்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் படிவங்களே நிரப்பி அனுப்பப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு சுற்றிலும் மூன்று வாசகர்களுக்கு பரிசில்கள் வழங்கப் கப்படும் பரிசுத்தொகை ரூ 500 . 00. பரிசுக்குரியவர்கள் குலுக் கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.
4. படிவங்களை 25 - 06 - 1993 க்கு முன் மாற்றம், பணிமனை, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி, என்ற புதிய முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்
5. இரண்டாவது சுற்று முடிவுகள் அடுத்த மாற்றம் இதழில் பிர சுரிக்கப்படும்.
6. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. எந்தவிதமான கடிதத் தொடர் புகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

---

**போட்டி இல. 02** **ஆதரவுச் சீட்டு - 02**

உங்கள் பெயர் :............................................................

முகவரி : ............................................................

............................................................

தேசாபிமானியின் பெயர்: ............................................................

முகவரி : ............................................................

என்ன காரணங்களுக்காக அவரைத் தேசாபிமானியாகத் தெரிவு செய்கிறீர் ? குறைந்தது ஐந்து காரணங்கள் எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கலைஞர் மன்றம்

''கலை இன்பமே நிலை இன்பம்'' என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்ட இளம்கலைஞர் மன்றம் 1971 ஆம் ஆண்டு திரு. பொன். சுந்தரலிங்கம் தலைமையில் உருவாக்கப்பட்டது.

இம் மன்றம் இலைமறை காய்களாக உள்ள கலைஞர்களின் கலைத்திறன்களை வெளிக்கொணரும் உயரிய இலட்சியத்துடன் செயலாற்றுகிறது. 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1982 ஆம் ஆண்டு வரையில் பல இசை, நடன, நாடகப் போட்டிகள் வைத்து 130 தங்கப்பதக்கங்கள்வரை வழங்கி இளங்கலைஞர்களை கௌரவித்துள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் கலாமண்டபம் ஒன்றைக் கட்டி மாபெரும் இசை விழா ஒன்றினையும் நடாத்திய பெருமை இம் மன்றத்துக்குரியதாகும். இதன்மூலம் கலைஞர்களுக்கென்று ஒரு மண்டபம் இல்லை என்ற குறை நிவர்த்தி செய்யப்பட்டதுடன், கடந்த காலங்களில் இம்மன்றத்தால் பயன்பட்ட 1500 க்கு மேற்பட்ட கலைஞர்களோடு இன்னும் ஆயிரம் ஆயிரம் இளங்கலைஞர்களை உருவாக்கி வழங்கி தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் பணிபுரிய வேண்டும் என ''மாற்றம்'' விரும்புகிறது.

- சூரியதீபன்

## சிறுகதைப் போட்டி

**வாசகர்களே!**

**உங்களிடம் இருந்து 'மாற்றம்' சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக சிறுகதைகளை எதிர்பார்க்கின்றோம். தரமான சிறுகதைக்கு ரூபா 100/= பரிசு வழங்கப்படும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம்

## தையல்

## மாளிகை

215, அர்ச்சுனாவீதி,
யாழ்ப்பாணம்.




## Vikram Tailoring Palace

**215, Arsuna ( Stanley ) Road, Jaffna.**

**( London Diploma Holder )**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரும் பெயர்க்காரணமும்

**பாண்டிருப்பு :** ''பாண்டவர் இருப்பு'' என்பதே மருவி காலப்போக்கில் பாண்டிருப்பு ஆக மாறியது. இங்கு பிரபல்யமான திரௌபதி அம்மன் ஆலயம் உண்டு. வருடந்தோறும் புரட்டாதி மாதத்தில் நடைபெறும் திருவிழாவில் பாண்டவர் துரியோதனனாதியோர் நடத்திய 18 நாள் பாரதயுத்தத்தின் சில நிகழ்வுகள் அங்கே மக்களுக்குக் காட்டப்பட்டு வருகின்றன.

**தம்பிலுவில் :** ''தம்பதிவில்'' என்பதே மருவி தம்பிலுவில் என்றாகியது. தம்பதிநல்லாள் எனப்பெயர் கொண்ட சோழநாட்டுச் சிற்றரசி அரசாட்சி செய்து அவள் பெயரால் அமைக்கப்பட்ட குளம் (வில்) அங்கிருந்தது.

**திருக்கோவில் :** ஈழத்தில் இப்பெயரால் அழைக்கப்படும் ஒரே ஒரு ஊர் இதுவாகும். தென்னகத்தில் திருக்கோயில் என்றால் சிதம்பரம் இவ்வூரிலுள்ள கோவிலுக்கும் பெயர் திருக்கோவில் ஆனால் இது முருகன் ஆலயமாகும். கோவிலின் பெயர் ஊர்ப்பெயராகவும் இருக்கிறது

**சத்துருக்கொண்டான் :** ''சத்துருக்கொன்றான்'' என்பதே இவ்வாறு மாறியது. படையெடுத்துவந்த எதிரிகளைக் கொன்ற இடம் என்பதே பொருள்.

**ஏறாவூர்:** படையெடுத்துவந்த எதிரிகள் அப்பால் நகரமுடியாமல் ஏறமுடியாமல் அவ்வெல்லையிலேயே நின்று திரும்பினர் அதனால் ஊர்ப்பெயரும் ஏறாவூர் ஆக வழங்கப்படுகிறது.

**களுவாஞ்சிக்குடி** ''கலைவஞ்சிக்குடி'' என்பதே நாளடைவில் களுவாஞ்சிக்குடி என மாறியது. ''கலைவஞ்சி'' என்றழைக்கப்படும் சிற்றரசி ஆட்சி செய்த இடம். 'குடி' என்பது இருப்பிடம்.

**வாழைச்சேனை:** சேனைப்பயிர்கள் போல் வாழைத்தோட்டம் நிறைந்து செழிப்புற்ற இடம்.

**சாய்ந்தமருது:** பாரிய ''அடையாளமாய்'' விளங்கிய மருதமரம் ஒன்று புயலால் சாய்ந்துவிழுந்துவிட்டது இதனால் சாய்ந்த மருது எனப்பெயர் வந்துவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வந்தாறுமூலை:** படையெடுத்துவந்த சோழ நாட்டுப்படைகள் களைப்பாறிய இடம் - வந்து - ஆறும் - மூலை, எனப் பெயராகியது.

**உகந்தை:** முருகன் வள்ளியோடு வந்து இதுவே எமக்கு ''உகந்த'' இடம் என அழைத்துக் கோயில் கொண்டு அருள் லீலைகள் செய்த இடம்.

— **'அக்கரைச்சக்தி'**

---

## இந்த ஆண்டிற்கான தேசாபிமானி யார்?

முதலாம் சுற்றில் பெற்ற ஆதரவுச்சீட்டுக்களின்படி,

i) முதலாம் இடம்: **திரு. க. மாணிக்கவாசகர்,**
அரச அதிபர் பணிமனை, யாழ்ப்பாணம்.

ii) இரண்டாம் இடம்: **திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை**
விநாயகர் தருமநிதியம், புலோலிமேற்கு, பருத்தித்துறை.

iii) மூன்றாம் இடம்: **திரு. இ. மகேந்திரன்**
அதிபர், யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

இவர்களைத் தெரிவுசெய்து ரூபா 500.00 ஐ பரிசாகப்பெறும் அதிஷ்டசாலிகள்

i) **க. ஷ. கஜறூபி,** 217/2, பலாலிவீதி, யாழ்ப்பாணம்
பரிசுத்தொகை 250/-

ii) **இ. ஜெஸ்மின்,** உடுவில் மகளிர் கல்லூரி.
பரிசுத்தொகை 150/-

iii) **ம. வடிவுக்கரசன்,** உரும்பிராய் இந்துக்கல்லூரி.
பரிசுத்தொகை 100/-

---

## பொது அறிவுப் போட்டி: 02ற்கான விடைகள்

1) சிலப்பதிகாரம்
2. i) விபுலானந்தர் ii) யாழ்நூல்
3) நெல்சன்மண்டேலா
4. i) ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் ii) விவேகானந்தர்
5) அற்லாண்டாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா?

1) இலண்டனின் பிரதான விமான நிலையம் எது?
2) கடலில் அலை மோதக்காரணம் என்ன?
3) இலங்கையின் நாணய அலகு முறையான ரூபா, சதம் எப்போது உருவானது?
4) "பிரைல்" முறை என்றால் என்ன?
5) முத்திரையில் பொறிக்கப்பெற்ற நீக்குரோ யார்?
6) பெரிய எரிமலைகள் உள்ள நாடு எது?
7) காந்திஜிக்கு "மகாத்மா" என்னும் பட்டத்தை சூட்டியவர் யார்?
8) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்போது ஆரம்பமாகியது?
9) உருளைக்கிழங்கில் பள்ளம் உண்டாவது ஏன்?
10) எறும்பு ஊரும் வேகம் எவ்வளவு?
11) ஒரு பைன் மரத்தில் செய்யக்கூடிய நெருப்புக் குச்சிகள் எவ்வளவு?

நல்லை - பிரபா.

---

**விடைகள்**

1) ஹீத்றோ
2) சூரிய, சந்திர இழுப்புச்சக்தி
3) 1872ம் ஆண்டு
4) பார்வையற்றோர் கை விரல்களால் எழுத கற்கும் முறை
5) புக்கர்
6) ஜப்பான்
7) கவிஞர் ரவீந்திர நாத் தாகூர்
8) 1974 ஐப்பசி 6ம் திகதி
9) மழை அதிகமானால்
10) மணிக்கு 720 அடி
11) ஒரு கோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரே கேளும்

கட்டிய கையின் பின்னே
கம்பு மறைந்திருக்க
எட்டி நடைபோட்டு
எமை விரட்டும் சில ஆசிரியரே கேளும்

அன்புக்காய் ஏங்குவோரை
அடிபணிய வைப்பதுவோ
பண்பான பிள்ளைகளை
பாவிபோல் ஆக்குவதோ

உற்றார் பிள்ளையெனில்
உமக்குள்ள குதூகலமோ - எவன்
பெற்றார் பிள்ளையிடம்
பருப்பளவும் காணவில்லை.

ஏழைகள் பிள்ளையெனில்
ஏளனங்கள் கூடிவிடும்.
கோழைகளாய் எமைவளர்க்க
கோபம் தான் காட்டுவதோ.

பணக்காரன் பிள்ளையெனில்
பணத்துக்காய் முதலாம்பிள்ளை
பிணம் கூட கிடைக்காது - நீர் இறந்த
பின்னாலே

முதலமைச்சர் பிள்ளையெனில்
முந்திக்கொண்டு கைகொடுப்பீர்
பதிலமைச்சர் பிள்ளையெனில்
பல்லிளிப்பு காட்டிடுவீர்


எல்லாப்பிள்ளைகளும்
எம்மீழப் பிள்ளைகள் தான்
சொல்லால் கண்டித்து
சோதனைகள் பெறாதீர் !

- தமிழின்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி : 03



பெயர் : ..............................

பாடசாலை : ..............................

வகுப்பு : ..............................

ஆசிரியரின் ஒப்பம் : ..............................

முகவரி : ..............................

..............................

## இடமிருந்து வலம்

01. மீன்வலைஞனை இவ்வாறு வழங்குவார்.

04. தறு-தலை ஒன்று தடுமாறிக் கிடக்கிறது.

06. கைக்கீறு, எழுதப்படிக்கத் தெரியாதவன் எனப்பொருள்படும்.

08. ஐந்திணைக் குறிக்கும் இது வந்தால் நாட்டில் அப்பாவி உயிர்கள் எல்லாம் இழக்கப்படும் என்பதால் ஈற்றெழுத்து ஒழிந்தது.

09. பெண்களில் இது கொண்டு அலைகிறது ஓர் சமூகம்.

11. திரைகடல் ஓடியும் இதைத் தேடும் என்பர்.

## மேலிருந்து கீழ்

01. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் இது பூண்டொழுக லான்.

02. வண்டியும் ஒரு நாள் இதில் ஏறும் என்பார்களே அதன் சிறு வடிவம்.

03. விலங்குகளுக்கு விரிப்பதை இன்று மனிதருக்கே விரிக்கிறார்கள்.

05. இதற்காகவே கோவில் இல்லா அம்மன்களின் பின் திரிகிறார்கள்.

07. பொன்னை குழூஉக்குறியாய் வழங்கக் குழம்பிவிட்டது.

10. தாளப்பிரமாணம் பத்தில் ஒன்று.

போட்டியில் எவரும் பங்குபற்றலாம். இக் கூப்பனை நிரப்பி 25 – 06 - 1993 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு 'மாற்றம் பணிமனை' புதிய செங்குந்த வீதி, திருநெல்வேலி, என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள் பரிசுத் தொகை ரூபா 100 /=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்: 02

**மேலிருந்து கீழ் :**

1) அந்தணர் 2) மின்னல் 3) கரும்புலி 4) தம்பி
6) காருண்யம் 8) கம்மாளர் 9) புல்லுருவி 11) மதி

**இடமிருந்து வலம் :**

1) அமிர்தலிங்கம் 5) கங்காரு 7) தனம் 8) கரும்பு
10) புல் 12) களம் 13) புத்தி 14) கவி

**பரிசு பெறுபவர்:**

வியோனை விஜிதா யா / வேம்படி மகளிர் கல்லூரி

**பாராட்டுப் பெறுபவர்:**

யா/இந்துக் கல்லூரியைச் சேர்ந்த, 1) ச. அகிலன் 2) கிருஸ்ணகுமாரன் 3) இ. தனரூபன் 4) வி. ஸ்ரீராம் 5) ஆ. வதுராஜ் 6) ப. சிவதீபன் சிவன்வண்ணை வீதி 7) ஆ. பார்த்தீபன் கே. கே. எஸ். வீதி 8) செ. மயூரதாஸ், இராமநாதன் வீதி 9) க. குபேரகுலசிங்கம் கோண்டாவில் வடக்கு 10) ந. நாகநிரஞ்சினி, கொக்குவில் மேற்கு 11) கா. தாரகா மானிப்பாய் 12) நா. இரசாத், தென் கோப்பாய் 13) ச. சுரேஷ்குமார், சாவகச்சேரி 14) ச. ராகுலன், வண்ணார் பண்ணை 15) ந. தனுஷ்யன் க. கே. எஸ். வீதி 16) ம. நிருஷ்யன், தென்கோப்பாய் 17) ஆ. சிவனேஷ்வரி. மானிப்பாய் மகளிர் கல்லூரி 18) சோ. சுவேந்திரன், கொக்குவில் 19) சி. அனுஷா, உரும்பிராய் 20) ந. ரமணன், தலையாளி, 21) இ. அன்ரனீனா தர்ஷினி யாழ். 22) சி. சுகந்தி, சீனியர் ஒழுங்கை 23) ச. சத்தியராணி, கொக்குவில் 24) அ. அருந்தவச்செல்வி, உரும்பிராய் 25) சி. ஸ்ரீஜீவா வட்டுக்கோட்டை 26) த. ஹரிப்பிரியா உரும்பிராய் 27) க. பகீரதன், கொழும்புத்துறை கல்லூரி.

### அட்டைப்படக் கவிதைப்போட்டி

அட்டைப்படத்தைப் பார்க்க என்ன தோன்றுகிறது என்பதை கவிதையாக எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைக்கு ரூபா 100 . 00 பரிசு வழங்கப்படும்.

இச்சஞ்சிகை தமிழ்த்தாய் மன்றத்துக்காக புதிய செங்குந்த வீதியில் உள்ள யாதுமூரான் அவர்களால் யாழ்ப்பாணம், அருண் பிறிண்டேர்ஸில் அச்சிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org